கள் குறிப்பிட்ட திகதிக்குப்பின்னர் இக்கந்தோருக்கு வந்தால் அவ் உத்தியோகத்தர்கள் குறிப்பிட்ட திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ தமது விண்ணப்பங்களைப் பகுதித் தலைவர் அல்லது மாநகரசபை ஆணையாளர், உள்ளூராட்சி மன்றத் தலைவர் ஆகியோரிடம் சமர்ப்பித்திருந்து, அப்பகுதித் தலைவர் அல்லது மாநகர சபை ஆணையாளர், உள்ளூராட்சி மன்றத் தலைவர் ஆகியோர் தாமதத்திற்குரிய உறுதியான காரணங்களைக் காட்டி, விண்ணப்பப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சிபார்சு செய்தாலன்றி, அவ்வுத்தியோகத்தர்களின் விண்ணப்பப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

(11) தகுதியுடைய விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம், விண்ணப்பப் பத்திரம் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படும்.

தலைவர்,
உ. ஆ. சே. அ. ச.

உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபை,
த.பெ. 530, கொழும்பு.
1966 ம் ஆண்டு சனவரி மீ 5 ந் உ.

1-282—12.1.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,634

---

# துணை விதிகள்

## தாலுகமப் பட்டினசபை

### பட்டின சபைக் கட்டளைச் சட்டம்

(256 ம் அத்தியாயமான) பட்டின சபைக் கட்டளைச் சட்டத்தின் 152 ம் பிரிவின் கீழும் 156 ம் பிரிவின் கீழும் தலுகம பட்டின சபையால் ஆக்கப்பட்டு, அக்கட்டளைச் சட்டத்தின் 153 ம் பிரிவினால் தமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் உள்ளூர் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி.

சீ. பாலசிங்கம்,
பதில் நிரந்தரக் காரியதரிசி,
உள்ளூர் ஆட்சி அமைச்சு.

கொழும்பு.
1965 ம் ஆண்டு திசெம்பர் மீ 31 ந் உ.

### துணைவிதி

வாகனங்கட்கும் மிருகங்கட்குமான வரி

சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமத் துணைவிதிகளின் XXII ம் பகுதியிலுள்ள 3 ம் துணைவிதியின் நோக்கத்துக்காக வாகனங்களின் அடையாள அட்சரங்கள் பின்வருமாறு :—

சைக்கிள், முச்சக்கரச் சைக்கிள் அல்லது சைக்கிள் கார், முச்சக்கரச் சைக்கிள் கார், அல்லது வண்டி ஒவ்வொன்றிற்கும் :

| | |
|---|---|
| (அ) வியாபார அலுவல்கட்கு உபயோகிக்கப்படின் | ද. ඹු. න. ස. වෙ. බ. |
| (ஆ) வியாபாரந் தவிர்ந்த ஏனைய அலுவலகட்கு உபயோகிக்கப்படின் .. | ද. ඹු. න. ස. බ. |
| (இ) இரட்டை மாட்டு வண்டி அல்லது திருக்கல் வண்டி ஒவ்வொன்றிற்கும் .. | ද. ඹු. න. ස. බ. ක. |
| (ஈ) ஒற்றை மாட்டு வண்டி அல்லது திருக்கல் வண்டி ஒவ்வொன்றிற்கும் .. | ද. ඹු. න. ස. බ. බං. |
| (உ) கைக்கரத்தை ஒவ்வொன்றிற்கும் .. | ද. ඹු. න. ස. අ. ක. |
| (ஊ) ஜின்ரிக்சோ ஒவ்வொன்றிற்கும் .. | ද. ඹු. න. ස. රි. ර. |

1-280—12.1.66 ந் தேதிய வர்த்தமானி இல. 14,634

---

## வரக்காப்பொலைப் பட்டினசபை

### பட்டின சபைக் கட்டளைச் சட்டம்

(256 ம் அத்தியாயமான) பட்டின சபைக் கட்டளைச் சட்டத்தின் 152 ம் பிரிவின் கீழும் 156 ம் பிரிவின் கீழும் வரக்காப்பொலைப் பட்டின சபையால் ஆக்கப்பட்டு, அக்கட்டளைச் சட்டத்தின் 153 ம் பிரிவின் கீழ் தமக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம், உள்ளூராட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகள்.

சீ. பாலசிங்கம்,
பதில் நிரந்தரக் காரியதரிசி,
உள்ளூர் ஆட்சி அமைச்சு.

கொழும்பு.
1965 ம் ஆண்டு திசெம்பர் மீ 31 ந் உ.

### துணைவிதிகள்

1. பின்வருவன அருவருப்பும் அபாயமும் விளைக்குந் தொழில்களெனக் கருதப்படும் :—

கொப்பரா உற்பத்தி செய்தல்.
தேநீர்—கோப்பிக்கடை வைத்தல்.
சர்வத்துச்சாலை வைத்தல்.
பத்து அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையில் வெள்ளாடு அல்லது செம்மறியாடு உள்ள காலை அல்லது பட்டி வைத்தல்.
12 கலனுக்கு மேற்பட்ட அசெற்றிக் அமிலம் இருப்பில் வைத்திருத்தல்.
அரைக்கும் ஆலை வைத்தல்.
பீடி உற்பத்தி செய்தல்.
சுருட்டு உற்பத்தி செய்தல்.
10 சாக்கிற்கு மேற்பட்ட அளவு சிமெந்து இருப்பில் வைத்திருத்தல்.
10 அந்தருக்கு மேற்பட்ட அளவில் கருவாடு இருப்பில் வைத்திருத்தல்.
தச்சு வேலைத்தலம் வைத்தல்.
மோட்டார் வாகனங்கள் பழுதுபார்க்க ஒரு நிலையம் வைத்தல்.
இயந்திரசாதனம் மூலம் ரப்பர் உற்பத்தி செய்தல்.
செங்கல், செம்பாறுங்கல், ஓடு அல்லது கருங்கல் இருப்பில் வைத்திருத்தல்.
சில்லறைச் சாக்குக் கடை வைத்தல்.
மொத்த வியாபாரத்திற்குப் பழுதடையத்தக்க உணவுப் பண்டங்களையும் உணவுப் பொருட்களையும் இருப்பில் வைத்திருத்தல்.
இறைச்சி பதனிடுதல் அல்லது உலர்த்துதல்.
மீனுக்கு ஐஸ் இடுதல்.
விறகு அலலது மரம் இருப்பில் வைத்திருத்தல்.
ஆபரணம் விற்பனை செய்வதற்கு ஓர் நிலையம் வைத்தல்.
ஆபரணம் உறபத்திசெய்ய ஓர் நிலையம் வைத்தல்.
மிட்டாய் உற்பத்திசெய்தல.
தேங்காய் மட்டை ஊறவைக்க நீர்க்குட்டை வைத்தல்.
3 சிப்பத்திற்கு மேற்பட்ட அளவில புகையிலையிருப்பில் வைத்திருத்தல்.
ரேடியோப்பெட்டி பழுதுபார்க்கும் நிலையம் வைத்தல்.
சலவைத் தொழிற்சாலை வைத்தல்.
சைக்கிள் பழுதுபார்க்கும் நிலையம் வைத்தல்.
செங்கல் உற்பத்தி செய்தல்.
எண்ணெய் எரிபொருள், நீராவி அல்லது மின்சாரத்தால் இயக்கப்படும் இயந்திரம் உபயோகிக்கப்படும் ஒரு தொழில் வைத்தல்.
தும்பு உற்பத்தி செய்தல் அல்லது இருப்பில் வைத்தல்.
தகட்டு ரப்பர் அல்லது கிரெப் ரப்பர் உற்பத்தி செய்தல் அல்லது புகையிடல்.
சவப்பெட்டி உற்பத்திசெய்தல் அல்லது இருப்பில் வைத்திருத்தல்.

பின்வருவன அபாயகரமான தொழில்களெனக் கருதப்படும் :—

வெற்றுப் போத்தல் இருப்பில வைத்திருத்தல்.
மயிர் வினைஞர் கடை அல்லது முடிதிருத்தும் சாலை வைத்தல்.
பாட்டரிகட்கு மின் ஊட்டல்.
மின்சார வேலைத்தலம் வைத்தல்.
வெற்றுச் சாக்கு இருப்பில் வைத்திருத்தல்.
உலை அல்லது கம்மாலை வைத்தல.
செம்பாறுங்கல், பரல்கல் அல்லது கற்கள் எடுக்க அகழ்தல்.
டயர், ரியூப் வல்கனைட்டால் ஒட்டும் நிலையம் வைத்தல்.
சுண்ணாம்பு சூளை வைத்தல், பதனிடல், அல்லது இருப்பில் வைத்திருத்தல்.
அச்சுக்கூடம் வைத்தல்.

1-279—12.1.66 ந் தேதிய வர்த்தமானி இல. 14,634

2. பின்வருவன அருவருப்பூட்டுந் தொழில்களெனக் கருதப்படும் :—

50 கலனுக்கு மேற்பட்ட அளவில பாணி இருப்பில் வைத்திருத்தல்.

## பெந்தோட்டை பட்டின சபை

### பட்டின சபைக் கட்டளைச் சட்டம்

(256 ம் அத்தியாயமான) பட்டின சபைக் கட்டளைச் சட்டத்தின் 152 ம், 156 ம் பிரிவுகளின் கீழ், பெந்தோட்டை பட்டின சபையால் ஆக்கப்பட்டு, அக்கட்டளைச் சட்டத்தின் 153 ம் பிரிவின் கீழ் தமக்கு அளிக்கப்பட்ட அதிகாரப்படி உள்ளூர் ஆட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி.

சீ. பாலசிங்கம்,
பதில் நிரந்தரக் காரியதரிசி,
உள்ளூர் ஆட்சி அமைச்சு.

கொழும்பு,
1965 ம் ஆண்டு டிசெம்பர் மீ 31 ந் உ.

**துணைவிதி**

1. பின்வருந் தொழில்கள் அருவருப்பும் அபாயகரமும் உள்ளன வெனக் கருதப்படும் :—

விடுதியகமொன்று வைத்திருத்தல்
ஒரு சாப்பாட்டுக் கடை வைத்தல்
ஒரு பாண்சாலை வைத்தல்
ஒரு தேநீர்க்கடை அல்லது கோப்பிக்கடை வைத்தல்
பழுதடையத்தக்க உணவுப் பண்டங்களும் பலசரக்குகளும் விற்கும் கடை ஒன்று வைத்தல்
ஆலை வைத்து தும்பு உற்பத்தி செய்தல்
கொப்பரா உற்பத்தி செய்தல்
பழுதடையத் தக்க உணவுப் பண்டங்கள், பலசரக்குகள் மொத்த விற்பனையில் விற்க இருப்பில் வைத்திருத்தல்
எண்ணெய், நீராவி, மின்சாரம் ஆகியனவற்றால் இயங்கும் பொறி மூலம் சப்பாத்து உற்பத்தி செய்தல்
வாயுப்பானங்கள் இருப்பில் வைத்திருத்தல்
மரக்காலை வைத்தல்
விறகுகாலை வைத்தல்
பொறிமூலம் நெல குற்றல், அல்லது மா அரைத்தல்
பொறி மூலம் மசாலைத்தூள் அரைத்தல்
சுண்ணம்புச் சூளை வைத்தல் அல்லது பதனிடுதல்
5 அந்தருக்கு மேற்பட மாசி இருப்பில் வைத்திருத்தல்
ஆபரணம் உற்பத்தி செய்தல்
மோட்டார் வாகனங்கள் பழுதுபார்க்க ஓர் நிலையம் வைத்தல்
சைக்கிள் பழுதுபார்க்க ஓர் நிலையம் வைத்தல்
முடிதிருத்தும் கடை வைத்தல்
வெற்றுச் சாக்குகள் அல்லது வெற்றுப் போத்தல்கள் இருப்பில் வைத்திருத்தல்
தகட்டு ரப்பர் அல்லது கிரேப் ரப்பர் உற்பத்தி செய்யும் நிலையம் வைத்தல்
50 கலன்கட்கு மேற்பட தேங்காய் எண்ணெய் இருப்பில் வைத்திருத்தல்
சுருட்டு அல்லது பீடி உற்பத்தி செய்தல்
மெத்தை உற்பத்தி செய்தல்
ஐஸ்கிறீம் உற்பத்தி செய்தல்
கம்மாலை வைத்தல்.

1–278—12.1.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,634

---

# நானாவிதம்

## ஊன்விலைஞர் பற்றிய சட்ட அறிவித்தல்

ஊன்விலைஞர் பற்றிய சட்டம் (அத்தியாயம் 272) 7 ம் பிரிவின் தாற்பரியப்படி இதன் கீழ்க்காணப்படும் அட்டவணையில் காணப்பவரிடமிருந்து 1966 ம் ஆண்டுக்கு ஊன்விலைஞர் கடைக்கு லைசென்ஸ் தரும்படி விண்ணப்பம் இடைக்கப்பட்டிருக்கிறது.

மன்னார் பட்டினசபையின் பரிபாலன இடப்பரப்பில் வசிப்போர் எவரேனும் லைசென்ஸ் கொடுப்பதை மறுக்க விரும்பினால் மறுப்பதற்கான காரணங்களை இந்த வர்த்தமானப் பத்திரிகையில் (கெசற்) பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து பதினாலு (14) நாட்களுக்கிடையில் இணைப்பிரதிகளாக எமக்கு அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**அட்டவணை**

| விண்ணப்பகாரரின் பெயரும் விலாசமும் | வியாபாரம் செய்யும் இடம் |
|---|---|
| 1. கே. எ. ரகுமான், பெற்று, மன்னார் | மாட்டிறைச்சிக்கடை இல. 1, பொதுச் சந்தை நிலையம், மன்னார் |
| 2. எம். எம். யூசுவ், முஸ்லீம் வீதி, மன்னார் | மாட்டிறைச்சிக் கடை இல. 2, பொதுச் சந்தை நிலையம், மன்னார் |
| 3. கே. எ. ரகுமான், பெற்று, மன்னார் | மாட்டிறைச்சிக் கடை இல. 3, பொதுச் சந்தை நிலையம், மன்னார் |
| 4. பி. எஸ். எஸ். கே. ஜேயினுலாப்தீன், இல. 1,088, மூன்றும் பிரிவு, மருதானை | ஆட்டிறைச்சிக் கடை இல. 1, பொதுச் சந்தை நிலையம், மன்னார் |
| 5. எஸ். ஜே. ஆப்தீன், முஸ்லீம் வீதி, மன்னார் | ஆட்டிறைச்சிக்கடை இல. 2, பொதுச் சந்தை நிலையம், மன்னார் |

எம். எஸ். எ. றகீம்,
தலைவர்.

பட்டினச் சபைக் காரியாலயம்,
மன்னார், 1965 ம் ஆண்டு திசெம்பர் மீ 31 ந உ.

1–328—12.1.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,634

---

## 1952 ம் ஆண்டின் 6 ம் இலக்க உள்ளூர் அதிகாரத் தாபனங்கள் (திட்ட உபவிதிகள்) சட்டம்

1952 ம் ஆண்டின் 6 ம் இலக்க உள்ளூர் அதிகாரத் தாபனங்கள் (திட்ட உபவிதிகள்) சட்டத்தின் 3 ம் பிரிவின்படி சிலாபம் மாவட்டத்து உடப்பு கிராமப் பகுதியின் கிராமச் சபையால் நிறைவேற்றப்பட்ட கீழ்க்காணும் தீர்மானம் அப்பிரிவின் தாற்பரியப்படி பிரசுரிக்கப்படுகின்றது.

**தீர்மானம்**

உள்ளூர் ஆட்சி அமைச்சர் அவர்களால் ஆக்கப்பட்டு " செனற் " சபையாலும், ஜனப்பிரதிநிதிகள் சபையாலும் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தால் அங்கீகரிக்கப்பட்டதென 1965 ம் ஆண்டு ஜனவரி மாதம் 8 ம் திகதி வெளியான 14,287 ம் இலக்க வர்த்தமானியில் அறிவிக்கப்பட்ட திட்ட உப விதிகளின் 38 ம் (XXXVIII) பாகத்தை இத்தீர்மானம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் திகதியில் இருந்து ஏற்றுக்கொள்வதென்று உடப்பு கிராமசபை 1952 ம் ஆண்டின் 6 ம் இலக்க உள்ளூர் அதிகாரத் தாபனங்கள் (திட்ட உபவிதிகள்) பற்றிய சட்டத்தின் 3 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின்படி இத்தால் தீர்மானிக்கின்றது.

ந. சிற்றம்பலம்,
தலைவர்.

கிராமச் சபை அலுவலகம்,
உடப்பு, 1965 ம் வருடம் நவெம்பர் மாதம் 11 ந் திகதி.

1–308—12.1.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,634

